# ஜப்பான் நாட்டின் பிரதமரின் அரசுமுறை இந்தியப் பயணம் (ஜனவரி 25-27, 2014)

ஜனவரி 22, 2014

இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் விடுத்த அழைப்பினை ஏற்று, ஜப்பான் நாட்டின் பிரதமர் மேதகு ஷின்சோ ஆபே அரசுமுறைப்பயணமாக இந்தியாவிற்கு 2014 ஜனவரி 25ந்தேதி முதல் 27ந்தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். இந்திய குடியரசுதினக் கொண்டாட்டங்களில் இந்தியாவின் தலைமை விருந்தினராக அவர் பங்கேற்கிறார்.

இந்திய ஜப்பான் இடையேயான வருடாந்திர மாநாட்டிற்காக பிரதமர் ஆபே, பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசுகிறார். அவர்கள் விவாதங்கள் இந்தியா-ஜப்பான் இடையேயான தளத்தகை மற்றும் உலகளாவிய கூட்டாண்மைக்கு மேலும் வலு சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா வருகை தரும் ஜப்பான் பிரதமர், இந்திய குடியரசுத் தலைவர் திரு பிரணாப் முகர்ஜியை சந்தித்துப்பேசுகிறார். 2014 ஜனவரி 26ந்தேதி குடியரசுதின அணிவகுப்பை பார்வையிடுகிறார்.

ஜப்பான் பிரதமருடன் அவரது துணைவியார் திருமதி அக்கி ஆபேவும் உடன் வருகிறார்.

**புது தில்லி**
**ஜனவரி 22, 2014**